8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

30. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு பெண்கள் நலச் சங்கத்திற்கு சொந்தமான TCY 2138 எண்ணுள்ள அவசர ஊர்திக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 22–9–1988-ஆம் நாளிட்ட 2089-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

31. MDU 9019 எண்ணுள்ள மோட்டார் வண்டிக்காக 1977-ஆம் ஆண்டு சனவரி மாதம் செலுத்த வேண்டிய வரிபாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 9–12–1988-ஆம் நாளிட்ட 2645-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

32. மதுரை, இந்திய செஸ்யர் இல்லத்திற்கு சொந்தமான TNU 9917 எண்ணுள்ள ஆட்டோ ரிக்ஷாவிற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 2–12–1987-ஆம் நாளிட்ட 2840-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

33. தமிழ்நாடு ஸ்பாஸ்டிக்ஸ் சொஸைட்டிற்க்கு சொந்தமான MSR 8660 எண்ணுள்ள பேருந்திற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 2–12–1987-ஆம் நாளிட்ட 2841-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

34. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1983–84-ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை,